உ

வேலுமயிலுந்துணை.

சதுரகிரி

அறப்பளீசுரசதகம்.

இவை,

அம்பலவாணக்கவிராயரால்,

இயற்றப்பட்டது.

இஃது.

மணிமங்கலம்.

வடிவேலுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

பிடாரித்தாங்கல்,

நாராயணசாமிமுதலியார் குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

சென்னை.

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1907.

சென்னை பிரம்பூர் குயப்பேட்டை 65-வது-நெ-வீடு.

P. N.

சுகந்த மூக்குத்தூள்.

இந்த பெயர்பெற்ற சுகந்த மூக்குத்தூளானது நூதனமாய் கண்டு பிடிக்கப்பட்டதை வெகு பெயர்களால் வாங்கி உபயோகித்து ஆயிரக்கணக்கான நற்சாக்ஷி பத்திரம் பெற்றிருக்கின்றது. இந்த மேலான பெருமைதங்கிய தூளினல் தீரும் வியாதிகளாவன:—ஜல தோஷம், பீனிசம், ஒற்றைத்தலைநோய், மண்டைக்குத்தல், கண்ணி லுண்டாகும் எல்லாவியாதிகளையும், தீர்ப்பதுடன், கண்டத்திற்கு மேற்பட்ட-96-வியாதிகளையும் மூளையைச்சார்ந்த வியாதிகளையெல் லாம் சொஸ்தப்படுத்திவைக்கும். எந்த மூக்குத்தூளும் இத்தனை பிர பல்யமுடையதாயும் முற்கூறிய வியாதிகளை கண்டிக்கக்கூடியதாயும் எவ்விடத்திலும் கிடைக்காது. கீழ்காணும் கம்பெனியாரால் செய்ய ப்படுகிற இந்த தூளானது சாதாரண புகையிலைத்தூளை 10-15-தட வைகள் உபயோகிப்பதைவிட மேலாய் காணப்படும். மூன்றுபைசா சாதாரண புகையிலை தூளுடன் இந்த சுகந்த மூக்குத்தூளில் ஒரு சிட்டிக்கை எடுத்து கலந்தால் எல்லாம் ஷை சுகந்த முண்டாகிவிடும். இதை அநேக பிரபுக்கள் தங்கள் வீடுகளில் குடும்ப அவுஷதமாய் வைத்து உபயோகித்து வருகிறுர்கள். இந்தத் தூளானது சாதாரண தூளைப்போல் 2-1-இரண்டொரு தினங்களில் தன் சுபாவக்குணமா கிய வாசனை, காரம் முதலியவைகளை விட்டுவிடாது. எக்காலமும் அதன் காரமும் வாசனையும் குணமும் தன்னைவிட் டகலாதபடி கார்த் துக்கொண்டே இருக்கும். இதை உபயோகிப்பதில் யாதொரு கெடு தியும் சம்பவிக்காது எந்த கம்பெனிகளிலாவது, மருந்து கடைகளி லாவது, பொடிகடைகளிலாவது வாங்குபவர்கள் பி. நா. என்பவரு டைய சுகந்த மூக்குத்தூளை கவனித்து வாங்கவேண்டும்.

பி. நா. சுகந்த மூக்குத்தூளை எங்கள் கம்பெனியிலும் கீழ்க் காணும், அட்ரசுடைய இடங்களிலும் வி-பி-மூலமாகவும் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

கிரயம் புட்டி 1-க்கு 0 4 0 டஜன் 1-க்கு விலை ரூ. 2 8 0
வி-பி சார்ஜ் புட்டி 1-க்கு 0 3 0 வி-பி-சார்ஜ புட்டி-12-க்கு 0 8 0

ஒரேதடவையில் 12-டப்பி அதாவது ஒரு டஜன் வாங்குப வர்களுக்கு விலை ரூபா 2 8 0

எமதுவிலாசம்.

பிரம்பூர் பாரக்ஸ் போஸ்டு, சென்னை.

வித்தியாரத்நாகரம் பிரஸ்.

பி. நா. சிதம்பரமுதலியார் அண்டுகோ.

உ

கணபதிதுணை.

அறப்பளீசுரசதகம்.

காப்பு.

வெண்பா.

உம்பர்கோ னெம்பெருமா னேங்கறப்ப ளீசுரன்மேற்
பைம்பொருள்சே ருஞ்சதகம் பாடவே—அம்புவியோர்
ஆக்குந் துதிக்கையுளா னன்புடையார்க் கின்பருளிக்
காக்குந் துதிக்கையுளான் காப்பு.

உயர்பிறப்பு.

கடலுலகில் வாழுமுயி ரெழுபிறப் பினுண்மிக்க காட்சிபெறு நரசென்ம மாய்க், கருதப் பிறத்தலரி ததினுமுயர் சாதியிற் கற்புவழி வருதலரிது, வடிவமுட னவயவங் குறையாது பிழையாது வருதலது தனினுமரிது, வந்தாலு மிதுபுண்ய மிதுபாவ மென்றெண்ணி மாசில்வழி நிற்ற லரிது, நெடியதன வானுத லரிததினி ரக்கமுள நெஞ்சினே னுதலரிது, நேசமுட னுன்பதத் தன்பனாய் வருதலிந் நிலத் ததினு மரிதாம், அடியவர்க் கமுதமே மோழைபூ பதிபெற்ற வதிபனெம தருமை மதவே, ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீசுரதேவனே. (க)

மனையாட்டிசிறப்பு.

கணவனுக் கினியளாய் ம்ருதுபாஷியாய்மிக்க கமலைநிகரூபவதியாய்க், காய்சினமி லாளுமாய் நோய்பழியி லாததோர் கால்வழியில் வந்த வளுமாய், மணமிக்கநாணமட மச்சம்பயிர்ப்பென்னவருமினிய மார்க்கவதியாய், மாமிமா மற்கிதஞ் செய்பவளுமாய்வாசல்வருவிருந் தோம்பு பவளாய், இணையின்மகிழ் நன்சொல்வழி நிற்பவளுமாய்ப்பிறந்த மில்வழிசெலாத வளுமாய், அணியிழை யொருத்தியுண் டாயினவள் கற்புடைய ளாகுமெம தருமை மதவே, ளனுதினமும னதினினை தருசதுர கிரிவள ரறப்பளீ சுரதேவனே. (உ)

நன்மக்கட் பேறு.

தங்குலம் விளங்கிடப் பெரியோர்கள் செய்துவரு தருமங்கள் செய்து வரலுந், தன்மமிகு தானங்கள் செய்தலுங்கனயோகசாதக

னெனப்படுதலும், மங்குதலிலாததன் றந்தைதாய்குருமொழி மரு
துவழி பாடு செய்லும், வழிவழிவருந்தமது தேவதா பத்திபுரி மார்
க்கமுமுப்தீர்க்கா யுளும். இங்கித குணங்களும் வித்தையும் புத்தியு
மீகையுஞ்சன்மார்க்கமு, மிவையெலாமுடையவன் புதல்வனுமவனை
யே யீன்றவன் புண்ய வானும், அங்கசவி ரோதியே சோதியே நீதி
சே ராசனெம தருமை மதவே, ளனுதினமு மனதினினை தருசதுர
கிரிவளரறப்பளீசுரதேவனே. (௩)

சகோதரரொருமை.

கூடப்பிறந்தவர்க் கெய்துதுயர்தமதுதுயர் கொள்சுகந்தஞ்சுக
மெனக், கொண்டுதாந்தேடுபொருளவர்தேடுபொருளவர்கொள்கோ
தில்புகழ் தம்புகழெனத், தேடுற்ற லவர்நிந்தை தந்தவந் தீதிலவர்
தவமா மெனச், சீவனொன்றுடல்வேறிவர்க்கென்னவைந்தலைச் சீறர
வமணிவாய்தொறும், கூடுற்ற விரையெடுத் தோருட னிறைந்திடுங்
கொள்கைபோற் பிரிவின்றியே, கூடிவாழ்பவர்தம்மை யேசகோதர
ரெனக் கூறுவது வேதருமமாம், ஆடிச்சிவந்தசெந் தாமரைப் பாத
னே யண்ணலெம தருமை மதவே, ளனுதினமு மனதினினை தரு
சதுரகிரிவள ரறப்பளீ சுரதேவனே. (௪)

சற்குரு வியல்பு.

வேதாந்தசித்தாந்த வழிதெரிந்தாசார விவரவிஞ்ஞானபூர்ண,
வித்யாவி சேஷசற் குணசத்ய சம்பன்ன வீரவைராக்யமுக்ய, சா
தாரணப்பிரிய யோகமார்க் காதிக்ய சமாதிநிஷ்டானுபவராய்ச், சட்
சமய நிலைமையும் பரமந்த்ர பரதந்த்ர தருமமும் பரசமயமும், நீதி
யினுணர்ந்துதத் துவமார்க்க ராய்ப்பிரம நிலைகண்டு பாசமிலராய், நி
த்தியா னந்தசை தன்யரா யாசையறு நெறியுளோர் சற்குரவராம்,
ஆதார மாயுயிர்க் குயிராகி யெவையுமா மமலவெம தருமைமதவே,
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீசுரதேவனே. ( )

நன்மாணுக்க ரியல்பு.

வைதாலு மோர்கொடுமை செய்தாலு மோசீறி மாறு திகழ்ந்
தாலுமோ, மனதுசற் றுகிலுங் கோணுதுநாணுது மாதாபிதாவென
க்குப், பொய்யாம னீயென்று கனிவொடும் பணிவிடை புரிந்துபொ
ருளுடலாவியும், புனிதவுன் றனதெனத் தத்தஞ்செய் திரவுபகல்
போற்றிமல ரடியில் வீழ்ந்து, மெய்யாக வேபரவி யுபதேசமதுபெ
றவிரும்புவோர் சற்சீடராம், வினைவேர றும்படியவர்க்கருள்செய்திடு
வதேமிக்கதேசிக ரதுகடன், ஐயாபுரம்பொடி படச்செய்தசெம்ம
லே யண்ணலெமதருமைமதவே, ளனுதினமு மனதினினை தருசது
ரகிரிவள ரறப்பளீ சுரதேவனே. (௬)

பொருள்செயல்வகை.

புண்ணிய வசத்தினாற் செல்வமது வரவேண்டும் பொருளைரட்சிக்க வேண்டும், புத்தியுட னதுவொன்று நூறாகவேசெய்துபோதவும் வளர்க்க வேண்டும், உண்ணவேண்டும்பின்பு நல்லவஸ்த்ராபரணமுடலிற் றரிக்க வேண்டு, முற்றபெரியோர்கவிஞர் தமராதுலர்க்குதவி யோங்குபுகழ் தேடவேண்டும், மண்ணில்வெகு தருமங்கள் செயவேண்டு முயர்மோக்ஷ வழிதேடவேண்டுமென்றி, வறிதிற்புதைத்துவைத் தீயாதபேர்களே மார்க்கமறியாக் குருடராம், அண்ணலேகங்காகுலத்தலைவன் மோழைதரு மழகனெமதருமைமதவே, ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீ சுரதேவனே. (எ)

தீவழிவிலக்கு.

வஞ்சகர் தமைக்கூடிமருவொணாதன்பிலார் வாசலிற்செல்லொணாது, வாதெவ ரிடத்திலும் புரியொணாதறிவிலா மடையர்முன்னிற்கொணாது, கொஞ்சமே னுந்தீது செய்யொணா தொருவர்மேற்குற்றஞ்சொ லொண்ணாதயர், கோதையர்க ளோடுபரி காசஞ்செயொண்ணாது கோளுரைகள்பேசொணாது, நஞ்சுதருமரவொடும்பழகொணாதிருள்வழி நடந்துதனி யேகொணாது, நதிபெருக்கானததி னீஞ்சல்செய் யொண்ணாது நல்வழிமறக்கொணாது, அஞ்சாமலரசர்முன்பேசொணா திவையெலா மறியுமெம தருமை மதவே, ளனுதினமு மனதினினைதருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (அ)

ஒன்றற்கொன்றழகுசெய்வன.

வாழ்மனை தனக்கழகு குலமங்கைகுலமங்கை வாழ்வினுக்கழகு சிறுவர், வளர்சிறுவ ருக்கழகு கல்விகல் விக்கழகு மாநிலந்துதிசெய்குணமாம், சூழ்குண மதற்கழகு பேரறிவுபேரறிவு தோன்றிடிலதற்கழகுதான், றாயதவ மேன்மையுப காரம்விரதம்பொறுமைசொல்லரிய பெரியோர்களைத், தாழ்தல்பணி விடைபுரிதல் சீலநேசங்கருணை சாற்றுமிவை யாமென்பர் காண், சௌரிமலரோனமரர்முனிவர்முச்சுடரெலாஞ் சரணமெமை ரட்சியெனவே, ஆழ்கடலுதித்துவருவிடமுண்டகண்டனே யண்ணலெம தருமை மதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (கூ)

ஒன்றில்லாமையாற் பயன்படாதவை.

கோவிலில் லாதவூர் நாசியில் லாமுகங் கொழுநனில் லாதமடவார், குணமதில் லாவித்தை பணமதில் லாதமலர் குஞ்சரமிலாதசேனை, காவலில்லாதபயிர் பாலரில் லாதமனை கதிர்மதி யிலாத வானம், கவிஞரில் லாதசபை சுதிலயை யிலாதபண் காவலரிலாததேசம், ஈவதில் லாததன நியமமில் லாதசெம் மிசைலவணமில்லாதவூ, ணிச்சையில்லாதபெண் போகநல மிவைதம்மி னேதுபல னுண்டு கண்டாய், ஆவியனை யாட்கிடந் தந்தவா கற்பதருவாகுமெமதருமைமதவே, ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீசுரதேவனே. (ய)

ஒன்றிற்கொன்றுதகாதசேர்க்கை.

பூததயை யில்லாத லோபியரிடத்திலே பொருளையருளிச்செய்தனை, புண்ணியஞ் செய்கின்ற சற்சன ரிடத்திலே பொல்லாதமிடி வைத்தனை, நீதியகன்மூடர்க் கருந்ததி யெனத்தக்க நெறிமாதரைத் தந்தனை, நிதானமுள வுத்தமர்க் கிங்கிதமிலாதகொடு நீலியைச்சேர்வித்தனை, சாதியி லுபர்ந்தபே ரீனர்பின்னேசென்றுதாழ்ந்துபரவச் செய்தனை, தமிழருமையறியாத புல்லர்மேற்கவிவாணர்தாம்பாடவே செய்தனை, ஆதரவிலாமலிப் படிசெய்ததென்சொலாயமலவெமதருமைமதவே, ளனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீ சுரதேவனே. (௧௧)

குணக்கேடரியல்பு.

மாறுதகலைகற்று நிலைபெற்றசபையிலேவாயிலாதவனொருபதர், வாள்பிடித்தெதிரிவரி னோடிப்பதுங்கிடு மனக்கோழைதானொருபதர், ஏறுவழக்குரைத் தனைவருஞ் சீசீயென் றிகழநிற்பா னொருபத, ரில்லாள் புறஞ்செலச் சம்மதித்தவளோடிணங்கிவாழ்பவனொருபதர், வேறொருவர்மெச்சாது தன்னையேதான்மெச்சி வீண்பேசுவானொருபதர், வேசையர்களாசைகொண்டுள்ளவுமனையாளை விட்டுவிடுவானொருபதர், ஆறுதுயரையும் மிடியையுந் தீர்த்தருள்செயமலவெமதருமை மதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௧௨)

செயத்தக்கவை.

வாலிபந் தனில்வித்தை கற்கவேண்டுங்கற்ற வழியிலேநிற்கவேண்டும், வலைகட றறிந்துபொரு டேடவேண்டுந்தேடி வளரறஞ்செய்யவேண்டும், சீலமுடையோர்களைச் சேரவேண்டு பிரிதல் செய்யாதிருக்க வேண்டுஞ், செந்தமிழ்ப்பாடல்பல கொள்ளவேண் டுங்கொண்டு தியாகங்கொடுக்கவேண்டும், ஞானமிசைபலதருமநாட்டவேண்டும்நாட்டி நன்றாய்நடத்தவேண்டும், நம்பனிணை யடிபூசை பண்ணவேண்டும்பண்ணி னாலுமிகு பத்திவேண்டும், ஆலமமர் கண்டனே பூதியணிமுண்டனே யனகவெமதருமமதவே ளனுதினமுமனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீ சுரதேவனே. (௧௩)

மேன்மேலுயர்ச்சி.

தன்மட்டிலிரவாது சீவனஞ்செய்பவன் சாமர்த்தியமுளபுருடனுஞ், சந்ததம் பதின்மரைக் காப்பாற்றுவோன்மிக்கதரணிபுகழ்தருதேவனும், பொன்மட்டி லாமலீந் தொருநூறு பேரைப் புறப்பவன்பொருவி லிந்த்ரன், புவிமீதி லாயிரம் பேர்தமைக் காப்பாற்று புண்ணியவானே பிரமனும், நன்மைதருபதினா யிரம்பேர்தமைக்காத்துரட்சிப்பவன் செங்கண்மா, னாளுமிவன் மேலதிக மாகவெகு பேர்க்குதவு நரனே மகாதேவனும், அன்மட்டுவார்குழலி பாகனேயேகனே யண்ணலே யருமைமதவே, ளனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீ சுரதேவனே. (௧௪)

செயற்கருஞ்செயல்.

நீர்மேனடக்கலா மெட்டியுந்தின்னலா நெருப்பைநீர்போற்செய்யலாம், நெடியபெரு வேங்கையைக் கட்டியேதழுவலா நீளரவினைப்பூணலாம், பார்மீதுமணலைச் சமைக்கலாஞ்சோறெனப் பட்சமுடனே யுண்ணலாம், பாணமொடுகுண்டுவிலக்கச்செய்யலாமரப் பாவைபேசப்பண்ணலாம், ஏர்மேவு காடியுங் கடைபுற்றுவெண்ணெயுமெடுக்கலாம் புத்திசற்று, மில்லாதமூடர்த மனத்தைத் திருப்பவேயெவருக்கு முடியாதுகாண், ஆர்மேவு கொன்றைபுனை வேணியாசுரர் பரவு மமலனேயருமைமதவே, எனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௧௫)

உத்தமராவோர்.

செய்நன்றிமறவாதபேர்களும்மொருவர்செய் தீமையைமறந்தபேருந், திரவியந்தரவிரனுமொருவர்மனையாட்டிமேற்சித்தம்வையாதபேரும்,கைகண்டெடுத்தபொருள்கொண்டுபோய்ப்பொருளாளர் கையிற்கொடுத்தபேருங், காசினியிலொருவர்செய் தருமங்கெடாதபடிகாத்தருள்செய்கின்றபேரும், பொய்யென்றுநிதிகோடி வரினும்வழக்கழிவு புகலாதநிலைகொள்பேரும், புவிமீதுதலைபோகுமென்னினுங் கனவிலும் பொய்மையுரை யாதபேருர், ஐயவிங் கிவரெலாஞ்சற்புருட ரென்றுலகி லகமகிழ்வதருமைமதவே, எனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீ சுரதேவனே. (௧௬)

இதுவுமது.

அடைக்கலமெனத்தேடி வருவோர்தமைக்கார்க்குமவனேமகாபுருடனு, மஞ்சாமலெதுவரினு மெதுபோகினுஞ்சித்த மசைவிலான் மகாதீரனும், தொடுத்தொன்றுசொன்னசொற் றப்பாது செய்கின்றதோன்றலே மகாராசனுந், தூறிக்கலைக்கின்றபேர்வார்த்தைகேளாததுரையேமகாமேருவாம், அடுக்கின்ற பேர்க்குவரு மிடர்தீர்த்திரட்சிக்கு மவனேமகாதியாகியா, மவரவர்தராதர மறிந்துமரியாதைசெயு மவனேமகாவுசிதனும், அடர்கின்றமுத்தலைச் சூலனேலோலனேயமலனேயருமைமதவே, எனுதினமுமனதினினை தருசதுர கிரிவளரறப்பளீசுரதேவனே. (௧௭)

ஒன்றிலொன்றில்லாமை.

காமிக்குமுறையில்லை வேசைக்கு நாணில்லை கயவர்க்கு மேன்மையில்லை, கன்னமிடுகள்வருக் கிருளில்லைவிபசார கன்னியர்க்காணையில்லை, தாமெனுமயக்கருத் தோங்குபெரியோர்க்குவரு ஜாதிகுலமென்பதில்லை, தாக்ஷிணியமுடையபேர்க்கிகலில்லையெங்குமொருசார்பிலார்க்கிடமதில்லை, பூமிக்குளீயாத லோபர்க்குவளமான புகழெனப்பதொன்றுமில்லை, புலையர்க்குநிசமில்லை கைப்பொருளிலாததோர்புருடருக்கொன்றுமில்லை, யாமினிதனக்குநிகர்கந்தரத்திறைவனேயன்புடைய வருமைதவே, எனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௧௮)

நற்குணங்களுக்கிடமாகாதவர்.

வெறிகொண்டமற்கடம் பேய்கொண்டுகள்ளுண்டு வெங்காஞ்
சொறிப்புதவிலே, வீழ்ந்துதேள்கொட்டிடச் சன்மார்க்கமெள்ளள
வுமேவுமோமேவாதுபோல், குறைகின்றபுத்தியா யதிலற்பசாதியாய்
க் கூடவேயிளமையுண்டாய்க், கொஞ்சமாமதிகார முங்கிடைத்தா
ன்மிக்க குலயந்தனிலவர்க்கு, நிறைகின்றபத்தியுஞ் சீலமும்மேன்
மையு நிதானமும்பெரியோர்கண்மே, னேசமும்மீகையும் மிவையெ
லாங்கனவிலு நினைவிலும்வராதுகண்டாய், அறைகின்றசுருதியின்
பொருளானவள்ளலே யண்ணலேயருமைமதவே, ளனுதினமுமனதி
னினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௨௭

இதனாலின்னமுறையனாமெனல்.

தன்னால்முடிக்கவொண் ணாதகாரியம்வந்து தான்முடிப்போன்
றமையனாந், தன்றலைக்கிடர்வந்த போதுமீட்டுதவுவோன் றாய்தந்தை
யென்னலாகும், ஒன்னார்செயுங்கொடுமை யான்மெலிவுவந்தபோது
தவுவோனிட்டதெய்வம், யுத்திபுத்திகள்சொல்லி மேல்வருங்காரிய
முரைப்பவன் குருவென்னலாம், எந்நாளும்வருநன்மை தீமைதன
தென்னவே யெண்ணிவருவோன்பந்துவா, மிருதயமறிந்துதன் செ
ற்படிநடக்குமவ னெவனெனினுமவனேசுதன், அந்நாரமும்பணிய
மெந்நாளுமேபுனையு மண்ணலேயருமைமதவே, ளனுதினமுமனதி
னினை தருசதுர கிரிவள ரறப்பளீசுரதேவனே. (௨௮

அவரவரிடத்துநடக்குமுறை.

மாதாபிதாவினுக்குள்ளன்புடன்கனிவு மாறாதநல்லொழுக்கம்
மருவுகுருவானவர்க் கினியவுபசாரமுள வார்த்தைபழி பாடடக்கம்
காதார்கருங்கண்மனை யாடனக்கோசயன காலத்தினயபாஷணங்,
ற்றபெரியோர் முதியர் வருமாதுலர்க்கெலாங் கருணைசேரருள்வித
னம், நீதிபெறுமன்னவ ரிடத்ததிகபயவினையநெறியுடையபேர்க்கி
இதம், நேயமுள தமர்தமக் ககமகிழ்வுடன்பரிவு நேரலரிடத்தில்
யிரம்,ஆதிமனுநூல்சொலும்வழக்கமிதுவாகுமெமதையனேயருமை
மதவே, ளனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீ சுரதே
வனே. (௨௯

குணத்தைவிட்டுக் குற்றத்தைக்கவர்தல்.

துட்டவிகடக்கவியை யாருமேமெச்சுவார் சொல்லுநற்கவிதை
மெச்சார், துர்ச்சனர்ககமகிழ்ந் துபசரிப்பார்வருந் தூயரைத்தள்ளி
விடுவார், இட்டமுளதெய்வந் தனைக்கருதிடார்கறுப் பெண்ணிலே
போய்ப்பணிகுவா, ரீன்றதாய்தந்தையைச் சற்றுமதியார்வேசைபெ
ன்னிலோகாலில்வீழ்வார், நட்டலாபங்களுக் குள்ளானபந்துவரி
ன்றாகவேபேசிடார், நாளுமொப்பாரியாய் வந்தபுத்துறவுக்கு நன்
மைபலவேசெய்குவார், அட்டதிசைசூழ்புவியி லோங்குகலிமகிமை
காணத்தனேயருமைமதவே, ளனுதினமு மனதினினை தருசதுரகிரி
வள ரறப்பளீசுரதேவனே. (௩௰

குணங்காண்குறி.

கற்றோர்களென்பதைச் சீலமுடனேசொலுங் கனவாக்கினாற் காணலாங், கற்புளாரென்பதைப்பார்க்கின்றபார்வையொடுகானடையினுங்காணலாம், அற்றோர்களென்பதனை யொன்றிலும்வாரா வடக்கத்தினாலறியலா, மறமுள்ளோரென்பதைப் பூததயையென்னுநிலையதுகண்டு தானறியலாம், வித்தோங்குபயிரைக் கிளைத்துவருதுடியினால் விளையுமென்றேயறியலாம், வீரமுடையோரென்பதோங்கிவருதைரிய விசேடத்தினாலறியலாம், அத்தாகுணத்தினாற் குலநலந்தெரியலா மண்ணலேயருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௩௧)

கூடிற்பயன்படல்.

செத்தைபலகூடியொரு கயிறாயினதுகொண்டு திண்கரியையுங் கட்டலாந், திகழ்ந்தபலதுளிகூடி யாறாயின்வாவியொடு திரளேறிநிறைவிக்கலாம், ஒத்தநுண்பஞ்சுபல சேர்ந்துநூலாயிடி னுடுத்திடுங் கலையாக்கலா, மோங்கிவருகோலுடன் சீலையுங்கூடினா லுயர்கவிகையாக்கொள்ளலாம், மற்றுமுயர் தண்டுலத் தோடுதவிடுமிகூடின்மல்குமுளைவிளைவிக்கலாம், மனமொத்தநேயமொடு கூடியொருவர்க்கொருவர் வாழின்வெகுவெற்றிபெறலாம், அற்றகனியைப்பொருத் தரிபிரமர்தேடரிய வமலனேயருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௩௨)

அதற்குவெற்றியிடம்.

கலைவலாருக்கதிக சயமதுரவாக்கிலே காமுகர்க்கதிகசயமோ, கைப்பொருளிலேவரு மருத்துவர்க்கோசயங் கைவிசேடந்தன்னிலே, நலமுடையவேசையர்க் கழகிலேயரசர்க்கு நாளும்ரணசூரத்திலே, நற்றவர்க்கதிகசய முலகுபுகழ்பொறையிலே ஞானவேதியர்தமக்கோ, குலமகிமைதன்னிலே வைசியர்க்கோசயங் கூறியதுலாக்கோலிலே, குற்றமில்லாதவேளாளருக்கோசயங் குறையாதகொழுமுனையிலே, அலைவில்குதிரைக்குநடை வேகத்திலதிகசய மாமென்பரருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௩௩)

ஒன்றனில்லாமையாற் பாழ்படல்.

தாம்பூலதாரண மிலாததேவருபூர்ண சந்திரனிகர்மிகசூனியஞ், சற்சனரிலாததே வெகுசனஞ்சேர்ந்துவாழ் தரும்பெரியநகர்சூனியம், மேம்பாடிலாதமன் னவர்கள்வந்தாள்வதே மிக்கதேசச்சூனியம், மிக்கசற்புத்திர னிலாததேநலமான வீறுசேர்க்ரகசூனியம், சோம்பாததலைவரில் லாததேவளமுடன் சொல்லுயர்சபாசூனியந், தொல்லுலகிலனைவர்க்கு மாநிதியமல்லதே சுத்தசூனிய மென்பர்காண், ஆம்பல்வதனத்தனைக் குகனையீன்றருள்செய்த வத்தனேயருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே

மூடர் தாரதம்மியம்.

பெண்புத்திகேட்கின்ற மூடருந்தந்தைதாய் பிழைபுறஞ்சொலுமூடரும், பெரியோர்கள்சபையிலே முகமேறிவந்து பிதற்றிடும் பெருமூடரும், பண்புற்றசுற்றஞ் சிரிக்கவேயிழிவான பழிதொழில் செய்திடுமூடரும், பற்றற்றபேர்க்குமுன் பிணைநின்று பின்புபோய்ப் பரதவித்திடுமூடரும், கண்கெட்டமாடென்ன வோடியிரவலர்மீது காய்ந்துவீழ்ந்திடுமூடரும், கற்றறிவிலாதமுழு மூடருக்கிவரெலாங் கான்மூடரரைமூடர்காண், அன்புற்றநாவலர்க் காகவேதூதுபோமையனேயருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௩௫)

இதற்கிதுவேண்டுமெனல்.

தனக்குவெகுபுத்தியுண் டாகினும்வேறொருவர் தம்புத்திகேட்கவேண்டும், தானதிகசூரனே யாகினுங்கூடவே தளசேகரங்கள்வேண்டும், கனக்கின்றவித்துவா னாகினுந்தன்னிலுங் கற்றோரைநத்தவேண்டுங், காசினியையொருகுடை யிலாண்டாலும்வாசலிற்கருத்துள்ளமந்த்ரிவேண்டும், தொனிக்கின்றசங்கீத சாமார்த்தியனாகினுஞ்சுதிகூட்டவொருவன்வேண்டுஞ், சுடர்விளக்காயினு நன்றாய்விளங்கிடத் தூண்டுகோலொன்றுவேண்டும், அனற்கண்ணனேபடிகசங்கநிகர்வண்ணனே யையனேயருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௩௬)

வறுமையின் கொடுமை.

மேலானசாதியி லுதித்தாலுமதிலென்ன வெகுவித்தைகற்றுமென்ன, மிக்கவதிரூபமொடு சற்குணமிருந்தென்ன மிகுமானியாகிலென்ன, பாலானமொழியுடைய னாயென்னவாசார பரனாயிருந்துமென்ன, பார்மீதுவீரமொடு ஞானவானாயென்ன பாக்யமிலாதபோது, வாலாயமாய்ப்பெற்ற தாயுஞ்சலித்திடுவள் வந்தசுற்றமுமிகழுமே, மரியாதையில்லாம லேவரும்பேசுவார் மனைவியுந்தூறுசொல்வாள், ஆலமுண்டகனிவாயனே நேயனே யனகனேயருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ( )

ஈனத்துவம்.

இரப்பவன் புசிக்கின்றவன்னமவ னுக்கில்லையென்னுமவ னவனிலீன, னீகின்றபேர்தம்மை யீயாமலேகலைத் திடுமூட னவனிலீனன், உரைக்கின்றபேச்சிலே பலனுண் டெனக்காட்டி யுதவிடா னவனிலீன, னுதவவேவாக்குரைத் தில்லையென் றேசொலு முலுத்தனே யவனிலீனன், பரக்கின்றயாசகர்க் காசைவார்த்தைகள்சொலிப் பலகாலலைந்துதிரியப் பண்ணிப்பி னில்லையென் றிடுகொடியபாவியே பாரிலெல்லோர்க்குமீனனாம், அரனேசக்கருமுதலா யுமைநேசனேயெளியரமுதனே யருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௩௮)

மறைப்பனவும் வெளிப்படுத்துவனவும்.

சென்மித்த வருடமும் முண்டான வத்தமுந் தீதில்கிரகச்சார
முந், தின்றுவரு மௌடதமு மேலான தேசிகன் செப்பிய மகாமந்
த்ரமும், புன்மையவ மானமுந் தானமும்பைம்பொன்னி புனையுமட
யார் கலவியும், புகழ்மேவு மானமும் மிவைபொன்ப துந்தமதுபுந்
திக்குளே வைப்பதே, தன்மமென் றுரைசெய்வ ரான்றோர் கருத்
தையுந் தன்பிணியையும் பசியையும், தான்செய்த பாவமும் மிவை
யெலாம்வேறொருவர் தஞ்செவியில் வைப்ப தியல்பாம், அன்மருவு
கண்டனே மூன்றுலகு மீன்றவுமை யன்பனே யருமைமதவே, எ
னுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௩௯)

தேவர்கள் காலவளவை.

சதுரயுக மோரிரண் டாயிரம் பிற்படிற் சதுமுகற் கொருதின
மதாஞ், சாற்றுமித் தினமொன்றி லேயிந்த்ர பட்டங்கடாமுமீரேழ்
சென்றிடும், மதிமலியு மித்தொகையி னயனுரி னூறுபோய் மாண்
டபோதொரு கற்பமாம், மாறிவரு கற்பமொரு கோடிசென்றுனெ
டியமாறனக் கோர்தினமதாம், துதிபரவு மித்தொகையி லொருகோ
டிநெடியமா றேன்றியே போய்மறைந்தா, லேழையோர் பாகனே
நீநகைத்தணிமுடி துளக்கிடுங் காலமென்பார். ஆதிமுள பலதேவ
ர் தேவனே தேவர்கட் கரசனே யருமைமதவே, எனுதினமு மனதி
னினை தருசதுர கிரிவள ரறப்பளீசுரதேவனே. (௪௰)

தூய்மையிடமும் தூய்மை செய்வனவும்.

வாம்பரி தனக்கதிக புனிதமுக மதனிலே மறையவர்க்குயர்பு
னிதமோ, மலரடியி லேபுனித மொளிகொள்கண் ணுடிக்கு மாசின்
முற் புறமதனிலே, மேம்படும்பசுவினுக் குப்பிற்புறத்திலே மிக்கமட
மர்தருக்கோ, மேனியெல் லாம்புனித மாகுமா சௌசமொடு மேவு
வனிதையர் தமக்கும், தாம்பிரம தற்குமிகு வெள்ளிவெண் கலமயந்
தங்கமியந் தமக்குந், தரும்புனிதம்வருபெருக் கொடுபுளிசுணஞ்சா
ம்பல் சாருமண் டாது சாணம், ஆம்புனித மிவையென்பர் மாமேரு
வில்லியே யனகனே யருமை மதவே, எனுதினமு மனதினினை தரு
சதுரகிரிவள ரறப்பளீ சுரதேவனே. (௪௧)

அடங்காதவற்றை யடக்கு முபாயம்.

கொடியபொலி யெருதையிரு மூக்கிலுங் கயிறொன்று கோர்
த்துவச வித்திகொள்வார், குவலயந்தனின்மதக் களிறதனையங்குச
ங் கொண்டுவசவித்திகொள்வார், படியில்விட வரவைமைந் திரதந்
திரத்தினுற் பற்றிவச வித்தி கொள்வார், பாய்பரியை நெடியகடி
வாளமதுகொடுநடை பழக்கிவச வித்திகொள்வார், விடமுடைய
துட்டரைச் சேர்பந்து கைக்கொண்டு வீசிவச வித்தி கொள்வார்,
மிக்கபெரியோர்களுங் கோபத்தை யறிவார், அடியவர் துதிக்கவரு
செந்தாமரைப்பதத் தையனே யருமை மதவே, எனுதினமு மனதி
னினை தருசதுரகிரிவள ரறப்பளீ சுரதேவனே. (௪௨)

ஒளியினுயர்வு.

செழுமணிக் கொளிபதன் மட்டிலே யதினுமோ செய்யபகசோதமெனவே, செப்பிடுங் கெநமிக்கு மிச்சமொளியதனினுந் தீபத்திடுனொளி யதிகமாம் பழுதிலாத் தீவர்த்தி தீபத்தி னதிகமாம் பகல்வர்த்திபதி லதிகமாம், பரமத் தாப்பினொளி யதிலதிக மதினுமோ பனிமதிக் கொளியதிகமாம், விழைவுதரு மரித்திக்கு மனுநீதி மன்னர்க்கும் வீரவிக ரனிகருக்கும், மிக்கவொளி திசைதொன்றும் போய்விளங்கிடுமென்ன விரதுளோ ருரைசெய்குவார், அழல்விழி கொடெரிசெய்து மதவேடனை வென்றவண்ணலே யருமைமதவே, ளனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே.()

குணங்குற்றமாதல்.

வான்மதியை நோக்கிடிற் சோரர்கா முகருக்கு மாறாத வல்விடமதாம், மகிழ்நன் றனைக்காணி விதமிலா விபசாரி மாதருக் கோவிடமதாம், மேன்மைதரு நற்சுவை பதார்த்தமுஞ் சுரரோக மிக்கபேர்க்கதிக விடமாம், வித்தியா திபர்தமைக் கண்டபோ ததிலோப வீணர்க்கெலாம் விடமதாம், ஈனமிகு புன்கவிக லோர்க்கதிக சபைகாணி லேலாத கொடியவிடமா, மேற்றமில் லாதபடு பாவிகட் கறமென்னி லென்னுளு மதிகவிடமாம், ஆனதவயோகியர்க ளிதயதாமறை யுறையு மண்ணலே யருமைமதவே, ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீ சுரதேவனே. (௪௪)

உயர்வன்றித் தாழ்வும் சிறக்குமிடம்.

வெகுமானமாகிலும் மவமான மாகிலும் மேன்மையோர்செய்யிலழகாம், விரகமே யாகிலுஞ் சரசமே யாகிலும் விழைமங்கைசெய்யிலழகாம், தருதாழ்வு வாழ்வுவெகுதருமங்களைச்செய்துசாரிலோ பேரழகதாஞ், சீரத்தி லேருனமானமெது வாகிலுஞ் சமர்செய்து வரிலழகதாம், நகமேவு மதகரியி லேறினுந் தவறினு நாளுமதுவோரழகதாம், நாய்மீதி லேறினும் வீழினுங் கண்டபேர் நகைசெய்தழகன்றென்பர்காண், அகமாயுற்றவர்க் கருள்புரியு மையனேயாதிமே யருமை மதவே, ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீசுரதேவனே. (௪௫)

நல்வினைசெய்தோர்.

சரணெனக் காத்தவன் மெய்யினாலென்றவன் றனமினையாதுதவினேன், றந்தைசொன் மறுதவன் முன்னவற் கானவன் றுய்பழிதுடைத்த நெடியோன், வருபிதிர்க்குதவினோன்றெய்வமேதுணையென்று மைந்தன் மனைவியை வரைந்தோன், மாறனதந்தையைத் தமைபனைப் பிறைநன்றி மாய்த்துலகின் மகிமை பெற்றோன், கருதரியசிபியரிச் சந்திரன் மாபலி கனிச்சிமியான் சுழுக்கிரைசுதன், சருடன் பகிரத னுடன்சிறக் கொண்டனெறி யானவன் பிரகலாதன், அரியவல் விபீஷணன் னெனுமகா புருடராமக்கனே தருமைமதவே, ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீசுரதேவனே. (௪௬)

தீவினைசெய்தோர்.

வாயிகழ் பேசிமிகு வாழ்விழந் தோன்சிவனை வைதுதன் றலை
போயினோன், மற்றொருவர் தாரத்தி லிச்சைவைத் துடலெலா மாறு
தவடுவாயினோன், தாயத்தி னோர்க்குள்ளபங்கைக்கொடாமலே சம்
பத் திழந்து மாய்ந்தோன், றக்கபெரியோர்தமை வணங்காமதத்தி
னாற்றந்திவடிவா யலைந்தோன், மாயனைச் சபையதனி னிந்தனைசெய்
தொளிகொணவ மணிமுடி துணிந்து மாய்ந்தோன், வருநகுட னொ
டுதக்க னயிராவதன்குருடன் மகன்வழுதிசிசுபாலனும், ஆயுமறிவா
ளரொடு தேவர்பணிதாளனே யவனிபுக ழருமைமதவே, ளனுதின
மு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீ சுரதேவனே. (௪௭)

நன்னகர்.

வாவிபல கூபமுட னாறருக்கு சேர்வதாய் மலைகாதவழியிலுள
தாய், வாழைகமு கொடுதெங்கு பயிராவதாய்ச்செந்நெல்வயல்கள்
வாய்க் கால்களுளதாய், காவிகம லங்குவளை சேரேரியுள்ளதாய்க் க
ணவர்த்தகர் கண்மறைவலோர், காணரியபலகுடிக ணிறைவுள்ளதா
ய்நல்ல காவல னிருக்கை யுளதாய்த், தேவராலயமாடல் பாடலணி
மாளிகை சிறக்கவுள தாய்ச் சற்சனர், சேருமிட மாகுமோ ரூர்கி
டைத்ததிலதிக சீவனமு மேகிடைத்தால், ஆவலோடிருந்திடுவதே
சொர்க்கவாசமென் றறையலா மருமை மதவே, ளனுதினமு மனதி
னினை தருசதுர கிரிவள ரறப்பளீ சுரதேவனே. (௪௮)

தீநகர்.

ஈனசா திகள்குடி யிருப்பதால் முள்வேலி யில்லில்லினுக்குமு
ளதா, யிணைமுலை திறந்துதன் தலைவிரித் திடுமாத ரெங்குநடமாட்
டமுளதாய்க், கானமொரு பக்கமாய் மலையோர மாய்முறைக் காய்
ச்சறப் பாதவிடமாய்க், கள்ளர்பய மாய்நெடிய கயிறிட்டிறைக்கின்
ற கற்கேணி நீருண்பதாய், மனமிலலாக்கொடியதுர்ச்சனர்தமக்கே
ற்றமணியபொன் றுண்டானதாய், மாநிலத் தோர்தல மிருந்தலனில்
வெகு வாழ்வதிலுமருநரகிலே, ஆனநெடு நாள்கிடந் தமிழ்தலே சுக
மாகு மமலனே யருமைமதவே, ளனுதினமு மனதினினை தருசதுர
கிரிவள ரறப்பளீ சுரதேவனே. (௪௯)

முழுக்கு நாள்.

வருமாதிவாரந் தலைக்கெண்ணெ யாகாது வடிவமிகுமழகுபோ
கும், வளர்திங்க ளுக்கதிக பொருள்சேரு மங்கார வாரந் தனக்கி
டர்வரும், திருமேவு புதனுக்கு மிகுபுத்தி வந்திடுஞ் செம்பொனுக்
குயரறிவுபோந், தேடியபொருட்சேத மாம்வெள்ளிசனியெண்ணெ
ய் செல்வமுண்டாயுளுண்டாம், பரிகாரமுளதாதி வாரந்தனக்கலரி
பௌமனுக் கானசெழுமண், பச்சறுகு பொன்னவற் காமெருத்நா
ளொளிப் பார்க்கவற் காகுமெனவே, அறிதாவறிந்தபேரெண்ணெ
ய்சேர்த்தேமுழுக் காடுவா ரருமைமதவே, ளனுதினமு மனதினினை
தருசதுரகிரிவள ரறப்பளீ சுரதேவனே. (௫௰)

மருத்துவன்.

தாதுப் பரீக்ஷைவரு காலதேசத்தொடு சரீரலட்சண மறிந்து, தன்மந்த்ர கும்பமுனி தேரர்கொங்கணர்சித்தர் தமதுவாகடமறிந்து, பேதப்பெருங்குளிகை சுத்திவகை மாத்திரைப் பிரயோகமொடுபஸ்பம், பிழையாது மண்டூர செந்தூரலட்சணம் பேர்பெறுங்குணவாகடம், சோதித்துமூலிகா விதநிகண் டுங்கண்டு தூயதைலம்லேகியஞ், சொல்பக்குவங்கண்டு வருரோக நிண்ணயந் தோற்றியே யமிர்த கரமாய், ஆதிப்பெருங்கேள்வி யுடையனு யுயர்வேத னுதுமெமதருமைமதவே, எனுதினமுமனதினிலே தருசதுர கிரிவள ரறப்பளீ சுரதேவனே. (௫௧)

உண்மையுணர்குறி.

சோதிடம்பொய்யாது மெய்யன்ப தறிவரிய சூழ்கிரகணஞ் சாட்சியாஞ், சொற்பெரியவாகடம் நிசமென்கைபோதிதருதூயமாத்திரைசாட்சியாம், ஆதியிற்செய்ததவ முண்டில்லையென்பதற் காளடிமை யேசாட்சியா, மரிதேவ தேவனென் பதையறிய முதநூலரிச்சுவடியேசாட்சியாம், நாதனேமாதேவ னென்பதற் கோருத்ர நமகசமகஞ்சாட்சியாம், நாயேனை ரட்சிப்ப துன்பாரமரியுவன் னுருமர்ச்சனைசெய் சரணத், தாதிநா யகமிக்க வேதநா யகனுன வண்ணலேயருமை மதவே, எனுதினமு மனதினிலே தருசதுர கிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫௨)

பிறவிக்குணமாருமை.

கலங்காதசித்தமுஞ்செல்வமுஞ்ஞானமுங் கல்வியுங் கருணைவிளைவுங், கருதரியவடிவமும் போகமுந்தியாகமுங் கனரூபமுளமங்கையும், அடங்காத வீரமும் பொறுமையுந்தந்திரமு மாண்மையுமமுதமொழியு, மானவிச் செயலெலாஞ் சனனவாசனையினு லாசிவருமன்றிநிலமேல், நலஞ்சேரு மொருவரைப் பார்த்தது பெறக்கருதினன் றுமோ ரஸ்தாளிதன், றன்சுவைதனக்குவரவேம்புதவுமோ நெடிது நாள்செயினும் வாராது காண், அலங்காரமாகமலர்கொன்றைமாலிகைசூடு மண்ணலே யருமைமதவே, எனுதினமு மனதினிலே தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫௩)

ஊழ்வலி.

கடலளவுரைத்திடுவரரிபிரமருநதமுங் காணும்நடிக்குமாரசெம்பவார், காசினியினளவுபிர மாணமதுசொல்லுவார்காயத்தினிலைமையறிவார், விடலரிய சிவநிலை காட்டுவார் மூச்சையும் விடாமற் றடுத்தடக்கி, மேன்மேலும் யோகசா தனைவிளைப்பாரெட்டி விண்மீதிலுந்தாவுவார், தொடலரிய பிரமநிலை காட்டுவா ரெண்வகைத்தொகையான சித்திபறிவார், சூழ்வினை வரும்பொழுது நிகழ்வுமுறல்வாரது கடைக்கமொரு நாண்முகற்கும், அடைவல வெனத்தெரிக்குதற்கில் பலநாக்சொல்லு மண்ணலே யருமை மதவே, எனுதினமு மனதினிலே தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫௪)

ஒப்புயர்வில்லாமை.

வேதியர்க் கதிகமாஞ் சாதியுங்கனகமக மேருவுக்கதிகமலையும், வெண்டிரை கொழித்துவரு கங்காநதிக்கதிக மேதினியிலோடுநதியும், சோதிதரு மாதவர்க் கதிகமாங்காந்தியுஞ் சூழ்கனற்கதிகசுசியும், தூபதாய் தந்தைக்கு மேலானதெய்வமுஞ் சுருதிக்குயர்ந்தகலையும், ஆதிவடமொழிதனக் கதிகமாமொழியுநுகரன்னதானந்தனிலுமோ, ரதிகதானமுமில்லை யென்றுபலநூலெலா மாராய்ந்துபேருரைசெய்வார், ஆதவன்பிரமன்விண ணவர்முனிவர்பரவவரு மண்ணலே யருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுர தேவனே. (௫௫)

வீண்செயல்.

வேட்டகஞ்சேர்வோரும் வீணரேவீணுரை விரும்புவோரவரின்வீணர், விருந்துகண்டில்லா டனக்கஞ்சியோடிமறை விரகிலோரவரின்வீணர், நாட்டந்தருங்கல்வி யில்லோரும்வீணரே நாடியவர்மேற்கவிசொல்வார், நானிலந்தனில்வீணரவரினும்வீணரே நரரைச்சுமக்குமெளியோர், தேட்டறிவிலாதபெரு வீணரேயவரினுஞ் சேரொருவரத்துமின்றிச், செலவுசெய்வோரதிக வீணராம்வீணுப்திரிமெளியேனையாட்கொண், டாட்டஞ்செயும்பதாம் புயமுடியின்மேல்வைத்த வமலனேயருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫௬)

உதவியின்றிக்கெடுவன்.

மூப்பொருவரில்லாத குமரிகுடிவாழ்க்கையும்மூதரணிலாதநகரும், மொழியும்வெகுநாயகஞ் சேரிடமும்வருமெதுக்கை மோனையில்லாதகவியும், காப்பண்மைவிலாததோர்நந்தவனமும்நல்ல கரையிலாநிறைபேரியும்,கசடறக்கற்காதவித்தையும்முபதேசகாரணனிலாததெளிவும், கோப்புளவினேதமுடை யோரருகு கழாதகோதையர்செய்கூத்தாட்டமுங், குளிர்புன்னிறைந்துவரு மாற்றூரமதினின்றுகோடியர்ந்தோங்குதருவும், ஆப்பதில்லாததே ரிவைபெலாமொன்றுக்குமையனேயருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫௭)

இவையே போதுமெனல்.

பொய்யாதவாய்மையுஞ் சீலமுஞ் சார்ந்துளோர் பூவலஞ்செயவேண்டுமோ, பொல்லாதசொலைகளவிலாதநன்னெறியுமுளார் புகழறஞ்செயவேண்டுமோ, நையாதகாமத்தை லோபத்தை விட்டபேர் நல்லறஞ் செயவேண்டுமோ, நன்மனேசுத்தியுண் டானபேர் மேனுமொரு நதிபடிந்திடவேண்டுமோ, மெய்யாநினடியரைப் பரவுவோருன்பதம் விரும்பிவழிபடவேண்டுமோ, வேதியர்தமைப்பூசை பண்ணுவோர்வானவரை வேண்டியர்ச்சனைசெய்வரோ, ஐயா[illegible] லசோணாசலந்தில்லை யதிபனேயருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௫௮)

அரியராவோர்.

பதின்மரிலொருத்தர்சபை மெச்சிடப்பேசுவோர் பாடுவோர் நூற்றிலொருவர், பார்மீதிலாயிரத் தொருவர்விதிதப்பாது பாடிப்ரசங்கமிடுவோர், இதனருமையறிகுவோர் பதினாயிரத்தொருவரிவரையறிந் திதயமகிழ்வா, ரீகின்றபேர்புவியி லேயருமையாகவே யிலட்சத்திலேயொருவராம், துதிபெருகவருமூன்று காலமுமறிந்தமெய்த் தாயர்கோடியிலொருவராந், தொல்லுலகுபுகழ்காசி யேகாம்பரங்கைலை சூழுமவிஞசிபேரூர், அதிகமுளவெண்காடு செங்காடுகாளத்தி யத்தனையருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௮௯)

கற்புமேம்பாடு.

தன்கணவனுருவமாய்த் தற்புணரவந்தோன் றனக்கிணங்கா நிறையா, டழற்கதிரெழாமலும் பொழுதுவிடியாமலுஞ் சாபங்கொடுத்தசெயலாள், மன்னிவளரழன்மூழ்கி யுலகறியவேதனது மகிழ்நனைச்சேர்ந்துபுரிவாள், மைந்தனைச்சுடவந்தவிறைவன்றடிந்த வடிவாண்மாலையானகனிவாள், நன்னிதிபடிந்திடுவ தென்னவாரழன்மூழ்கி நாயகனை மேவுதயவா, ஞானிலம்புகழ்சாலி பேர்பெறுநளாயினி நளினமலர்மேல்வைதேகி, அன்னமெனவருசந்த்ர மதிதுரோபதியென்ப ராதிபேபருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௯௰)

கோடி யுடுக்குநாள்.

கறைபடாதொளிசேரு மாதிவாரந்தனிற் கட்டலாம்புதியசிலை, கலைமதிக்காகாது பலகாலு மழையினிற் கடிதுநனைவுற் றொழிதரும், துறைபடா திடர்வரும் வீரியம்போமரிய குருதிவாரந் தனக்குச், கொஞ்சநா ளிற்கிழியும் வெற்றிபோய்பந்தியிற் குருவாரமதிலணிந்தால், மறைபடாதழகுண்டு மேன்மேலுநல்லாடை வருமினியசுக்கிரற்கோ, வாழ்வுண்டுதிருவுண்டு பொல்லாதசனியற்கு வாழ்வுபோமரணமுண்டாம், அறைகின்றவேதாகமத்தின்வடிவாய்விளங்கமலனையருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௯௧)

சகுனம்.

சொல்லரியகருடன்வா னரமரவமூஞ்சூறு சூகரங்கீரிகலைமான், றய்யபாரத்வாச மட்டையெலிபுன்கூகை சொற்பெருக மருவுமாந்தை, வெல்லறியகரடிகாட் டான்பூனைபுலிமேல் விளங்குமிருநாவுடும்பு, மிகவுரைசெயிவையெலாம் வலமிருந்திடமாகில் வெற்றியுண்டதிகநலமாம், ஒல்லையின்வழிப்பயண மாகுமவர்தலைதாக்க லொருகுடையிருற்றல்பற்ற, லொருதும்மலானையிட லிருமல்போதேலென்ன வுபசுருதிசொல்லிவையெலாம், அல்லறருநல்லவலவென்பர்முதியோர்பரவு மமலனையருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௯௨)

இதுவுமது.

நரிபயில்பசுங்கிளி கோழிகொக்கொடுகாக்கை நாவிசிச்சிலி
யோந்திதான், நரையான்கடுத்தவாய்ச்செம்போத்துடன்மேதி நாட
ரியசுரபிமறையோர், வரியுழுவைமுயலிவை யினத்தும்வல மாயிடி
ன் வழிப்பயணமாகைநன்று, மற்றுமிவையன்றியே குதிரையனுமா
னித்தல் வாய்ச்சொல்வரவாவென்றிடல், கருவிளைதொனித்திடுதல்
கொம்புகிடுமுடிமுரசு தப்பட்டையொலிவல்லேவட்டுக், தனிபணிமு
ழக்கெழுத லிவையெலாமூர்வழி தனக்கேகநன்மையென்பார், அரு
ணகிரமேனுதயத் தருணபானுவையனைய வண்ணலேயருமைமதவே,
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ()

இதுவுமது.

தலைவிரித்தெதிர்வருத லொற்றைப்பிராமணன் றவசிசன்னாசி
தட்டான், றனமிலாவெறுமார்பி மூக்கறைபுல்விறகு தட்டைமுடி
மொட்டைத்தலை, நலன்கழிமடந்தையர் குசக்கலஞ்செக்கான் கதி
த்ததிலதைலமிவைகள், காணவெதிர்வரவொணா நீர்க்குடமெருக்கூ
டை கனிபுலாலுபயமறையோர், நலமிகுசுமங்கலை கிழங்குசூதகமங்
கை நாளும்வண்ணானழுக்கும், நசைபெருகுபாற்கலச மணிவளைய
ன்மலரிவைக ளுடியெதிர்வரநன்மையாம், அலைகொண்ட கங்கைபு
னைவேணியாய்ப்பரணியு மண்ணலேயருமைமதவே, ளனுதினமும
னதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௬௪)

உணவில்விலக்கு.

கைவிலக்குக்கொள்ளும் பாலசப்பால்வருங் காராக்கறந்தவெ
ண்பால், காளான்முருங்கைசுரை கொம்படிபழஞ்சோறு காந்திக்க
ரிந்தசோறு, செவ்வையில் சிறுகீரை பீர்க்கத்திவெள்ளுப்பு தென்
னைவெல்லம்லாவகஞ், சீரிலாவெள்ளுள்ளி யீருள்ளியிங்குவொடு சி
றப்பில்வெண் கத்தரிக்காய், எவ்வமில்சிவன்கோயி னிர்மாலியங்கிர
ண மிலகுசுடரில்லாதலூ, ணிவையெலாஞ்சிலமுடை யோர்களுக்கா
கா வெனப்பழையநூ லுரைசெயும், ஐவகைப்புலன்வென்ற முநிவர்
விண்ணவர்போற்று மமலனேயருமைமதவே, ளனுதினமுமனதினி
னை தருசதுரகிரிவள ரறப்ப்ளீசுரதேவனே. (௬௫)

நற்பொருளிற்குற்றம்.

பேரானகங்கா நதிக்குமதன்மேல்வரும் பேனமேதோஷமாகு
ம், பெருகிவளர்வெண்மதிக் குள்ளுட்களங்கமே பெரிதானதோஷ
மாகும், சீராந்தபோதனர்க் கொருவர்மேல்வருகின்ற சீற்றமேதோ
ஷமாகுந், தீதின்முடிமன்னவர் விசாரித்திடாதென்று செய்வர்மேற்
றோஷமாகும், தாராளமாமிகத் தந்துளோர்தாராமை தானிரப்போ
ர்தோஷமாஞ், சாரமுளநற்கருப் பஞ்சாறுகைப்பதவர் தாலஞ்செய்
தோஷமாகும், ஆராயுமொருநான் மறைக்குமெட்டாதொளிரு மண்
ணலேயருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரற
ப்பளீசுரதேவதேவே. (௬௬)

மணைகோல்வதற்குமாதம்.

சித்திரைத்திங்கடனின் மணைகோலமணைபுகச் செல்வமுண்டா திலுநலமே, சேரும்வைகாசிக்கு மேனாளரன்புரந் தீயிட்டதானி யாதா, வெற்றிகொளிராவணன் றேவிசிறைசேர்கடகம் வீரல்லாவ ணிகம், மேவிநிங்கன்னியிர ளிபன்மாண்டதாகாது மேன்மையு ண்டைப்பசிக்கே, உத்தமக்கார்த்திகைக் காகர்துமாக்கழியி லோங் குமாரதம்வந்தநா, ளுபர்வுண்டுமகரத்தின் மாசிமாதத்தில்விட மும்பர்கோனுண்டதாகா, தத்தநீமாரனை யெரித்தபங்குனிதானு மா குமோவருமைமதவே, ளனுதினமு மனதினினை தருசதுரகிரிவளரற ப்பளீசுரதேவனே. (௯௭)

விருந்துவாரம்.

செங்கதிர்க்குறவுபோம் பகைவரும்விருந்தொருவர் செய்யொ ணாதுண்ணொணாது, திங்களுக்குறவுண்டு நன்மையாம் பகைவருஞ் செவ்வாய் விருந்தருந்தார், பொங்குபுத னன்மையுண் டுறவாம்விரு ந்துணப் பொன்னவற் கதிகபகையாம், புகரவற்காகிலோ நெடுநாள் விரோதமாய்ப் போனவுறவுந்திரும்பும், மங்குநிகர்சனிவார நல்லதா மதனினு மனமொத்திருந்தவிடமே, வாலாயமாய்ப்போய் விருந்து ணவிருந்துதவ வாய்த்தநாளென்றறியலாம், அங்கையில் விளங்கிவ ளர் துங்கமழுவாளனே யண்ணலேயருமைமதவே, ளனுதினமுமன தினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௯௮)

பூப்புவாரம்.

அருக்கனுக்கதிராகி யாவணற்சோமனுக் கானகற்புடையளா வா, ளங்காரகற்குவெகு துக்கியாவாள்புந்தியளவில்லைங்குழவிபெ றுவாள், திருக்கருவியாழத்தின் மிக்கசம்பத்தினொடுசிறுவரைப்பெ ற்றெடுப்பாள், சீருடையபார்க்கவற் கதிபோகவதியுமாந் திருவுமுண் டாயிருப்பாள், கருத்தழிந்தொழில்குன்றிவறுமைகொண்டலைகுவா ள் சனிவாரத்திலாகில், களபமுலைமடமாதர் புட்பவதியாம்வார நாலபலனென்றுரைசெய்வார், அருத்தியுடனெளியேனை யாட்கொ ண்டசோதிமய யண்ணலே யருமைமதவே, ளனுதினமுமன தினினை தருசதுரகிரிவள ரறப்பளீசரதேவனே. (௯௯)

பூப்பிலக்கணம்.

வறுமைதப்பாதுவரு மேடத்தி லிடபத்தின் மாறுதா விபசாரி யாம், வாழ்வுண்டுபோகமுண் டாகுமிதுனங்கடகம் வலிதினிற் பிற ரையணைவாள், சிறுமைசெயு மிடிசேர்வண் மிருகேந்திரற்கேனிற் சீ ர்பெறுவள் கன்னியென்னில், செட்டுடைய துலையெனிற் பிணியாண் மெலிந்திடுவ டேளினுக்குத்தனுசெனில், நெறிசிதைவள் பூருவத் தபதநெறியுடையளா ணீண்மகரமானமிவளா, நிறைபோகவதிகும் பமெனன்மீனமென்னிலோ நெடியபேரறிவுடையளாம், அறிவாள ர்மடமாதர் தமையறியிராசிபல னதுவென்ப ரருமைமதவே, ளனு தினமுமன தினினை தருசதுரகிரிவள ரறப்பளீசரதேவனே. (௱)

தீவுங் கடலும்.

நாவலந்தீவினைச் சூழ்கருங்கடலளவு லட்சம்யோ சனையிதனை
யே, நாடொறுஞ்சூழ்வதில வந்தீவதைச்சூழ்த னற்கழைச்சாற்றின்
கடல், மேவுமிதுசூழ்வது குசத்தீவதைச்சூழ்தன் மிகுமதுக்கடலத
னையே, விழைவொடுஞ்சூழ்தல்கிர வுஞ்சதீவம்மிதனின் மேற்சூழ்த
னெய்க்கடலதாம், பூவிலிதுசூழ்தல்சா கத்தீவமிங்கிதைப் போர்ப்ப
துதிருப்பாற்கடல், போதவதுசூழ்தல்சான் மலிதீவமாந்தயிர்ப்புண
ரியப் பாலுமப்பால், ஆவலுறுபுட்கரத் தீவாமிதைச்சூழ்வ தரும்பு
னற்றருமைமதவே, எனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்
பளீசுரதேவனே. (௭௧)

மேலான பொருள்.

சுழிசுத்தமாயிருந் ததிலும்படைக்கான துரகமோர் மாணிக்க
மாகும், சூழ்புவிக்கரசனு பதிலேவிவேகமுள துரையுமோர் மாணிக்க
மாம், பழுதற்றவதிரூப வதியுமாய்க்கற்புடைய பாவையோர் மாணி
க்கமாம், பலகலைகள்கற்றறியடக்கமுளபாவலன் பார்க்கிலோர்மாணி
க்கமாம், ஒழிவற்றசெல்வனு யதிலேதி யாகியா முசிதனோர்மாணிக்
கமாம், முத்தமகுலத்துதித் ததிலுமோமெஞ்ஞான முடையனோர்மா
ணிக்கமாம், அழிவற்றவேதாக மத்தின்வடிவாய்விளங் கமலனேயரு
மைமதவே, எனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுர
தேவனே. (௭௨)

உண்டி யிலையும் முறையும்.

வாழையிலைபுன்னைபுர சுடனற்குருக்கத்தி மாம்பலாத் தெங்குப
ன்னீர், மாசிலமுதுண்ணலா முண்ணுத வேவரசு வனசஞ் செழும்
பாடலம், தாழையிலையத்தியா லேரண்ட பத்திரஞ் சகதேவ முண்
முருக்குச், சாருமிவையன்றிவெண்பாலெருக்கிச்சிலிலை தனினுமுண்
டிட வொணுதால், தாழ்விலாச்சிற்றுண்டி நீரடிக் கடிபருகல் சாதங்
கள்பலவருந்தல், சற்றுண்டன்மெத்தவு னித்தனையுமெய்ப்பிணி த
னக்கிட மெனப்பருகிடார், ஆழிபுடை சூழுலகில் வேளாளர்குலதி
லகனு நமெமதருமைமதவே, எனுதினமு மனதினினை தருசதுர
கிரிவள ரறப்பளீசுரதேவனே. (௭௩)

கவிஞர் வருமை.

எழுதப்படிக்கவகை தெரியாதமூடனை யிணையிலாச்சேடனெ
ன்று, மீவதில்லாதகன லோபியைச்சபையதனி லிணையிலாக்கர்ண
னென்றும், அழகற்றவெகுகோர ரூபத்தையுடையோனை யதிவடிவ
மாரனென்று, மாயுதமெடுக்கவுந் தெரியாதபேடிதனை யாண்மைமி
குவிஜயனென்றும், முழுவதும்பொய்சொல்லி யலைகின்ற வஞ்சகனை
மொழியரிச் சந்த்ரனென்று, மூதுலகிலிவ்வணஞ்சொல்லியேகவிரா
ஜர் முறையின்றியேற்பதென்னே, அழலெனவுதித்துவருவிடமுண்
டகண்டனே யமலனேயருமைமதவே, எனுதினமு மனதினினை த
ருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௭௪)

கவிஞன்.

தெள்ளமிர்த தாரையென மதுரங்கதித்ததைப் தேன்மடைதிற ந்ததெனவே, செப்புமுத்தமிழ் தெரிந்து நாற்கவிதைநாற்பொருடெரி ந்துரைசெய் திறமையுடனே, விள்ளரியகாவியத் துட்பொருளலங்கா ரம் விரியிலக்கணவிகற்பம், வேறுமுள தொன்னூல் வழக்குமுலகத் தியல்பு மிக்கப்ரபந்தவண்மை, உள்ளமெல்லாமறிந் தலையடங்குங் கடலை யொத்ததிகசபைகண்டபோ, தோங்கலையொலிக்கின்ற கடல் போற்ப்ரசங்கமதுரைப்பவன் கவிஞனாகும், அள்ளியிட முண்டகனி வாயனே நேயனே யமலனே யருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௭௫)

நற்சார்பு.

காணரியபெரியோர்க டரிசனம் லபிப்பதே கண்ணிணைகள் செய்புண்ணியங், கருணையாயவர்சொன்மொழிகேட்டிடலபிப்பதிரு காதுசெய் திடுபுண்ணியம், பேணியவர்புகழையே துதிசெயலபித்தி டுதல் பேசில்வாய் செய்புண்ணியம், பிழையாமலவர்தமைத் தொழு திடலபிப்பதுகை பெரிதுசெய்திடுபுண்ணியம், வீணெறிசெலாமலவர் பணிவிடை லபிப்பதுதன் மேனிசெய் திடுபுண்ணியம், விழைவொடவர் சொற்படி நடந்திட லபிப்பதே மிக்கபூருவபுண்ணியம், ஆணவமெனுங்களைகளைந்தறி வினைத்தந்த வண்ணலே யருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௭௬)

பிறந்தநாளோடு வருகிற வாரபலம்.

சென்மநக்ஷத்திர மாதிவாரம்வரிற் றீரா தலைச்சலுண்டாந், தி ங்களுக் காகில்வெகு சுகபோச னத்தினொடு திருமாதி னருளுமுண் டாம், வன்மைதருமங்கார வாரம்வந் தாற்சிறிதும் வாராது சுகமெதென்பார், மாசில்பல கலைபயில்வர் மேன்மையாம் புந்தியெனும் வாரத் துடன் கூடினால், நன்மைதரு குருவார மதுசேர்ந்து வரிலாடை நன் மையுடனே வந்திடும், நாரியருடன்போக மிகவுமுண்டொருவெள்ளி நல்லவாரத்தில்வந்தால், அன்பருவுபீடையுண் டாமென்பர்சநியனு க்கமலனே யருமைமதவே, ளனுதினமு மனதினினை தருசதுரகிரிவ ள ரறப்பளீசுரதேவனே. (௭௭)

இதனையுடையவர்க்கிதுவில்லையெனல்.

பொன்னாசையுள்ளவர்க் குறவேதுகுருவேது பொங்குபசியுள் ளபேர்க்குப், போதமேசுசியேது ருசியேது பயல்கொண்டு பொது மாதர் விழிவலையிலே, எந்நாளுமலைபவர்க் கச்சமொடு வெட்கமே தென்றென்று முறுகல்வியே, யிச்சையுளபேர்க்கதிக சுகமேது தூயி லேது வெளிதாயிருந்துகொண்டே, பன்னாளுமலைபவர்க் கேதுமேது புகழேது பாரிலொருவர்க்கதிகமே, பண்ணியிடு மூடருக்கறமேது மறமலாற் பகர்நிரையமொன்றலாதுகாண், அன்னைவருநாரிபுரித் தணியுமெய்யனே யமலனே யருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௭௮)

மழைநாட்குறிப்பு.

சித்திரைத் திங்கள்பதின் மூன்றுக்கு மேனல்ல சீரான பரணி
மழையுந், தீதில்லை காசியிற் பூரணைசமித்தபின் சேருநாளினில், ஒ
த்துவரு மழையுமவ் வானியிற் றேய்பிறையி லோங்குமே காதசியி
னி, லொளிர்பரிதி வீழ்பொழுதின் மந்தார முமமழையு முண்டா
யிருந்தாடியில், பத்திவரு தேதியைந் தினிவாதி வாரமும் பகருமா
வணிமூலநாள், பரிதியு மறைந்திடக் கனமழை பொழிந்திடப் பாரி
ல்வெகுவிளைவுமுண்டாம், அத்தனே பைங்குவளை மாலையணிமார்ப
னே மண்ணலெம தருமை மதவே, எனுதினமு மனதினினை தருச
துர கிரிவள ரறப்பளீ சுரதேவனே. (௭௯)

இருந்து முதவாமை.

சமயத்தி லுதவாத நிதியமேன் மிகதுயர் சார்பொழுதி லாத
கிளையேன், சபைமுகத்துதவாத கல்வியே னெதிரிவரு சமயத்தி லா
தபடையேன், விமலனுக் குதவாத பூசையேனுளுமிருள் வேளைக்கி
லாதசுடரேன், வெம்பசிக் குதவாத வன்னமே னீடுகுளிர் வேளைக்கி
லாத கலையேன், தமதுதளர் வேளைக்கி லாதவோர் மனைவியேன் சரச
சத்திலாத நகையேன், சாமரண காலத்தி லுதவாதபுதல்வனேன் ற
ரணிமீதென்பர்கண்டாய், அமரர்க்கு முனிவர்க்கு மொருவர்க்குமெ
ட்டாத வாதியேயருமைமதவே, எனுதினமு மனதினினை தருசது
ரகிரிவள ரறப்பளீ சுரதேவனே. (௮௰)

மறையோர் சிறப்பு.

ஓராறு தொழிலையுங் கைவிடார் சௌசவிதி யொன்றுதப்பா
துபுரிவா, ருதயாதி யிற்சென்று நீர்படிகு வார்கால மொருமூன்றி
னுக்குமறவர், தாராய்ந்து காயத்ரி யதுசெபிப் பார்நாளு மதிதிபூ
சைகள் பண்ணுவார், யாகாதி கருமங்கள் மந்த்ரகிரியாலோபமின்றி
யே செய்துவருவார், பேராசைகொண்டிடார்வைதிகநன்மார்க்கமே
பிழையா திருக்கு மறையோர், பெய்யெனப் பெய்யுமுகி லவர்மகி
மையெவர்களும் பேசுதற் கரிதரிது காண், ஆரார் நெடுஞ்சடில வம
லனே யெனையாளு மண்ணலே யருமைமதவே, எனுதினமு மனதி
னினை தருசதுரகிரிவள ரறப்பளீ சுரதேவனே. (௮௧)

அரசர் சிறப்பு.

மநுநீதி முறைமையும் பரராசர் கொண்டாட வருமதிக ரண
வீரமும், வான்விஜய மொடுசரச சாதனவிசேஷமும் வாதிமத கரி
யேற்றமும், காமா மமைச்சரும் பலமான துர்க்கமுங் கைகண்ட
சேர்பாடைகளும், கஜரத பதாதியுந் துரகப்ரவாகமும் காலதேச
வர்த்தமானமையும், இனிதாயறிந்தவ்தா னபந்த லொடுசமர்க் கிளையா
த தளகர்த்தரு, மென்றும்வற்றாதகள தானிய சமுத்திரமு மேற்ற
முள குடிவர்க்கமும், அனேவோரு மெச்சவிங் கிவையெலாமுடைய
பேரரசராமருமைமதவே, எனுதினமு மனதினினை தருசதுர கிரிவ
ள ரறப்பளீசுர தேவனே. (௮௨)

வைசியர் சிறப்பு.

நீள்கடல் கடந்திடுவர் மலையாள முட்போவர் நெடிதூரந் தி
ரிந்து, நினைவுதடு மாறார்கள் சலியார்கள் பொருடேடி நிலைத் தர
சுபுரியும், வாளுழவரைத் தமதுகைவசஞ்செய்வார்கள் வருமிடம்வரா
தவிடமும், மனதையு மறிந்துதவி யொன்றை நூறாயிட வளர்ப்பர்வ
ருதுலைதுலைக்கும், ஆள்விடுவர்மலிவுகுறைவது விசாரித்திடுவரளவில்
பற்பலசரக்கு, மமைவுறக் கொள்வர்விற் பார்கணக்கதிகனுமறவி
டார்செலவு வரிமேலோ, ஆளியொத் தேமலையி னளவுங் கொடுத்திடுவ
ருள்வசிய ரருமைமதவே, ளனுதினமு மனதினினை தருசதுரகிரிவ
ள ரறப்பளீசுரதேவனே. (அ௩)

வேளாளர் சிறப்பு.

சேனாதி கருமமுந் தப்பாமல் வேதிய ரியற்றிநல் லேர்பெறுவ
தும், ராச்சியபாரஞ்செய்து முடிமன்னர்வெற்றிகொண் டென்றுநல்
லோர்பெறுவதும், வசனாதி தப்பாது தனதா னியந்தேடி வசியர்நல்
லேர்பெறுவதும், மற்றுமுள பேரெலா மிடியென்றிடாததிக வள
மைபெற் றோர்பெறுவதும், திசைதோறு முள்ளமல தேவாலயப்பூ
சை செய்யநல் லேர்பெறுவதுஞ், சீர்கொண்ட பைங்குவளை மாலை
புனை வேளாளர் செய்யுமே ழிப்பெருமைகாண், அசையாது வெள்
ளிமலை தனின்மேவி வாழ்கின்ற வண்ணலே யருமைமதவே, ளனுதி
னமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீசுரதேவனே. (அ௪)

தானாதிபதி மந்திரி சேனாதிபதிகளி னியல்பு.

தன்னரசர் வலுமையும் பரராச ரெண்ணமுஞ் சாலமேல் வரு
கருமமுந், தானறிந் ததிபுத்தி யுத்தியுண் டாயினோன் றானாதி பதி
யாகுவான், மன்னவர் மனத்தையுங் காலதேசத்தையும் வாழ்குடி
படைத் திறமையும், மந்திரா லோசனையு மெல்லாமறிந்தவன் வள
மானமதிமந்திரி, துன்னிய படைக்குணங் கரிபரி பரீக்ஷையே சூழ்
பகைவர்புரி சூழ்ச்சியுந், தோலாத வெற்றியுந் திடமானசித்தியுள சூ
ரனே சேனாதிபன், அன்னையினி நல்லமலை மங்கைபங்காளனே யன
கனேயருமைமதவே, ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரற
ப்பளீசுரதேவனே. (அ௫)

இராயச கருணீகர் சிறப்பு.

ஒருமோலை யுத்தரத் தெழுதிவரு பொருளினால் வரவிடுப் போ
ன் மனதையும், மருவிவரு கருமமுந் தேசகா லத்தையும் வருகா த
ரமலெசுமா, விரைவாயறிந்தரச ரெண்ணிலெண் ணினையள விடவெ
ழுத வாசிக்கவும், வெற்றிகொண்டேபெரிய புத்தியுடையோன் பனி
யின் மேன்மையா மசகாரனும், கருவாயறிந்து மெதாசை யிராறுகொ
டியினிற் கடிதேற்றி டக்குறைக்கக், கடுகையொரு மலையாக்க மலை
யையொரு கடுகுமாக் காட்டுவோன் கருணீகனும், அருவாகியுருவா
கிவெளியாகி யொளியாகு மண்ணலே யருமை மதவே, ளனுதினமு
மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (அ௬)

கோபத்தின்கொடுமை.

கோபமே பாவங்க ளுக்கெலாந் தாய்தந்தை கோபமே குடிகெடுக்குங், கோபமே யொன்றையுங் கூடிவர வொட்டாது கோபமே துயர்கொடுக்கும், கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு கோபமே யுறவறுக்குங், கோபமே பழிசெயுங் கோபமே பகையாளி கோபமே கருணை போக்கும், கோபமே யீனமாங் கோபமே யெவரையுங் கூடாம லொருவ னாக்குங், கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீய்நரகக் குழியினிற்றள்ளுமால், ஆபத்தெலாந் தவிர்த் தென்னையாட்கொண்டருளுமண்ணலேயருமைமதவே, ளனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௮௭)

பல் துறை.

தான்புரி தவத்தையுங் கொடையையும் புகழுவோர் தங்களுக்கவை தழைவுறா, சற்றுமறிவில்லாம லந்தணரைநிந்தனைசெய் தயவிலோ ராயுள்பெருகார், மேன்படு நறுங்கலவை மாலைதயிர்பால்புலால் வீடுநற்செந்நெ லிவைகள், வேறொருவர் தந்திடினு மறுமொழியறிந்தபேர் விலைகொடுத் தேகொள்ளுவார், தேன்கனி கிழங்குவிற கிலையிவை யனைத்தையுந் தீண்டரிய நீசரெனினுஞ், சீர்பெற வளிப்பரே லிகழாது கைகொள்வார் சீலமுடை யோரென்பரால், ஆனகொடி யுயர்த்தவுமை நேசனே யீசனே யண்ணலே யருமைமதவே, ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீசுரதேவனே. ()

தத்துவத் திரயம்.

பூதமோ ரைந்துடன் புலனைந்து ஞானம் பொருந்துமிந் திரியமைந்து, பொருவில்கன் மேந்திரிய மைந்துமனமாதியாம் புகலரியகரண நான்கே, ஒதினோ ரிவையாத்ம தத்துவ மெனச்சொல்வ ருயர்கால நியதி கலையோ, டோங்கிவரு வித்தைரா கம்புருடன் மாயையென் றுரைசெய்யுமோரேழுமே, தீதில்வித் யாதத்வ மென்றிடுவ ரிவையலாற்றிகழ்தத்வ வித்தையீசன், சீர்கொள்சா தாக்கியஞ் சத்தசிவ மைந்துமே சிவதத்வ மென்றறைகுவார். ஆதிவட நீழலிற் சனகாதி யர்க்கருள்செ யண்ணலே யருமைமதவே, ளனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீ சுரதேவனே. (௮௯)

மன்மதபாணமும் அவற்றின் குணமுதலியவும்.

வனசஞ் செழுஞ்சூத முடனசோ கந்தளவ மலர்நீலமிவையையைந்துமே, மாரவேள் கணைகளா மிவைசெயுங் குணமுளரி மனதிலாசையையெழுப்பும், வினவிலொண் சூதமலர் மெய்ப்பசலையுண்டாக்கு மிகவசோ கந்துயர்செயும், வீழ்த்திடுங் குளிர்முல்லை நீலமுயிர் போக்கிவிடு மேவுமிவை செயுமவத்தை, நினைவிலது வேநோக்கம் வேறொன்றிலாசையற நெட்டுயிர்ப் பொடுபிதற்ற, னெஞ்சந் திடுக்

கிடுத லனம்வெறுத் திடல்காய்ச்ச னேர்தன்மௌ னம்புரிகுதல், அ
ணையவுயிருண்டில்லை யென்னவீரைந்துமா மத்தனேயருமைமதவே,
எனுதினமு மனதினிலே தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ()

மன்மத னுபகரணங்கள்.

வெஞ்சிலை செழுங்கழைவி னரிகருவண்டின மேல்விடுங்கணைக
ளலராம், வீசிடுந் தென்றறேர் பைங்கிளி யேபரிகள் வேழங்கொடா
தவிருளாம், வஞ்சியர் பெருஞ்சேனை கைதையுடைய வாணெடிய
வண்மைபெறு கடன்முரசமாம், மகரம்ப தாகைவரு கோகிலங் கா
களம் மனதே பெரும் போர்க்களம், சஞ்சரிகை யிசைபாடல் குழ
தநேயன்கவிகை சாரிரதி யேமனைவியாந், தறுகண்மட மாதரிள மு
லைமகுடமாமல்கு றவருதிருக்கு மிடமாம், அஞ்சுகணை மாரவேட்
கெம்பரெளி யோர்க்கெலா மமுதமே யருமைமதவே, எனுதினமு
மனதினிலே தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௬௧)

பகைகொளத் தகாதவர்.

மன்னவ ரமைச்சர்துர்ச் சனர்கோளர் தூதரொடு மாறுதமர்ம
முடையோர், வலுவர்கரு ணீகர்மிகு பாகஞ்செய் தன்னமிடு மடைய
ர்மந் திரவாதியார், சொன்னமுடை யோர்புலைய ருபதேசமதுசெய்
வோர் சூழ்வயித்தியர் கவிதைகள், சொற்றிடும் புலவரிவர் பதினைந்
து பேரொடுஞ் சொற்பனந் தனிலாகிலும், நன்னெறி யறிந்தபேர்ப
கைசெய் திடார்களிந் நானிலத் தென்பர் கண்டாய், நாரியோர்பாக
னேவேதாக மம்பரவு நண்பனே யன்பர்நிதியே, அன்னமூர்பிரமனு
ங்காணுதவண்ணலே யருமை மதவே, எனுதினமு மனதினிலே தரு
சதுர கிரிவள ரறப்பளீசுரதேவனே. (௬௨)

இதாகிதஞ்செய்து பயன் கொள்வன.

சுவைசேர் கரும்பைவெண் பாலைப் பருத்தியைச் சொல்லுநன்
னெல்லை யெள்ளை, தூயதெங்கின்கனியை யெண்ணை துட்டரைத்
தொழும்பை, நவைதீர மாறுகண் டித்தே பயன் கொள்வர் நற்றமி
ழ்க் கவிவாணரை, நலமிக்க செழுமலரை யோவிய மெனத்தக்க நய
முள்ள நாரியர் தமைப், புவிமீதி லுபகார நெஞ்சரைச் சிறுவரைப்
போர்வீரரைத் தாயரைப், போதவும் பரிவோ டிதஞ்செய்ய மிகுப
யன்புகழ்பெறக்கொள்வர்கண்டாய், அவமதி தவிர்த்தென்னை யாட்
கொண்ட வள்ளலே யண்ணலே யருமை மதவே, எனுதினமு மன
தினிலே தருசதுர கிரிவள ரறப்பளீசுரதேவனே. (௬௩)

த ரு ம ம்.

பெறும்இல்பெறு வித்தலொடுநாளோலை நாடோறும்பிள்ளைகளு
க்கிடும்பால், பேசரியசத்திர மடமாவுரிஞ்சுகல் பெண்போக காளி

தன் வணுன், மறைமொழிகணுடிதண் ணீர்தலைக்கெண்ணெய்பசுவரி யினுறை பிணமடக்கல், வாவியிறுமுயிர்மீட்ட நின்பொருளடைக் காய் வழங்கல்சுண் ணும்புதவுதல், சிறையுறுபவர்க்கமுது வெற்றில ங்காத்தல்பொழில் செய்தன்முன் னூலின்மணந், திகழ்விலங் கூண் பிச்சையறுசமயருக்குண்டி தேவராலயமவுஷதம், அறைதல்கற்போ ர்க்கன்ன நாலெட்டறங்களுமு னன்னைசெய லருமைமதவே, எனு தினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (கூச)

இ ல் ல ற ம்.

தந்தைதாய் சற்குருவை யிட்டதெய் வங்களைச் சன்மார்க்கமு ளமனைவியைத், தவறுதசுற்றத்தை யேவாத மக்களைத் தனைநம்பிவ ருவோர்களைச், சிந்தைமகிழ்வெய்தவே பணிவிடைசெய் வோர்களை த்தென்புலத்தோர் வறிஞரைத், தீதிலாவதிதியைப் பரிவுடையது ணைவரைத் தேனுவைப்பூசுரர்தமைச், சந்ததஞ்செய்கடனை யொன் றுமிவை பிழையாது தான்புரிந்திடலில்லறஞ், சாருநலமுடையராந் துறவறத்தோருமிவர் தம்முடன்சரியாயிடார், அந்தரியுயிர்க்கெலா ந்தாய்தனினுநல்லவட் கன்பனேயருமைமதவே, எனுதினமு மனதி னினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (கூரு)

பு ரா ண ம்.

கலைமைசேர் பௌடிக மிலிங்கமார்க் கண்டமெழில் சாரும்வா மனமச்சமே, சைவம்பெருங்கூர்மம் வரும்வராகங்காந்த சரிதமேபிர மாண்டமும், நிலைமைசேரிப்பத்து முயர்சிவ புராணமா நெடியமால் கதை வைணவம், நீதிசேர்காருட நாரதம்பாகவத நீடிய புராணநா ன்காம், கலைவளர்சொல் பதுமமொடு பிரமகைவத்தமே கமலாலயன் காதையாம், கதிரவன்காதையே சூரியபுராணமாங் கனல்காதையா க்கினேயம், அலைகொண்டநதியும்வெண் மதியுமறு கும்புனையு மத்த னேயருமைமதவே, எனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப் பளீசுரதேவனே. (கூசா)

பு க ழ் ச் சி.

பருகாத வமுதொருவர் பண்ணுதபூஷணம் பாரின் மறையாத நிதியம், பரிதிகண்டலராத நிலவுகண்டுலராத பண்புடைய பங்கே ருகம், கருகாத புயல்கலைக ளருகாததிங்கள்வேய் காணிலுறையாதசீ யங், கருதரிய விக்குண மனைத்துமுண்டானபேர் காசினியி லருமை யாகும், தெரியவுரை செய்யின்மொழி கீர்த்திவருகல்வியொடு சீரித யமீகைவதனந், திடமானவீரமிவை யென்றறிகுவார்களிச் செகமெ லாங்கொண்டாடவே, அருள்கற்ப தருவென்ன வோகிடுந் தானது ரை யாகுமெமதருமைமதவே, எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீசுரதேவனே. (கூள)

திருமா லவதாரம்.

சோமுகாசுரனைமுன் வதைத்தமரர் துயர்கெடச் சுருதிதரபு
மற்சமாஞ், சுரர்தமக்கமுதீந்த தாமையாம் பாய்போற் சுருட்டிப
நிலமெடுத்தே, போமிரணி யாக்கதனை யுயிருண்டதேனமாம் பொ
லாதகனகனுயிரைப், போக்கியது நரசிங்க முலகளந்தோங்கியது
னிதவா மனமூர்த்தியாம், ஏமுறு மிராவணனை வென்றவனிராகவன
ரவிகுலம் வேரறுத்தோ, னேர்பரசி ராமன்வருகண்ணனெடுபலரா
னிப்புவி பயந்தவிர்த்தோர், ஆமினிய கற்கியினி மேல்வருவ தினை
த்து மரிவடிவமருமைமதவே, ளனுதினமு மனதிநினை தருசதுர கி
வள ரறப்பளீசுரதேவனே. (௯அ

சிவமூர்த்தி.

பிறைசூடி யுமைநேசன் விடையூர்திநடமிடும் பெரியனுயர்வ
வைரவன், பிச்சாடனன்காம தகனன்மற லியைவென்ற பெம்ம
ன் புரந்தகித்தோன், மறமலி சலந்தரனை மாய்த்தவன் பிரமன்மு
வெளவினோன் வீரேசுரன், மருவுநர கங்கத்தை வென்றவர னுமை
பாகன் வனசரன்கங்காளனே, விறன்மேவு சண்டேச ரக்ஷகன் க
மாந்தி மிக்கசக்கரமுதவினோன், விநாயகற் கருள்செய்தோன் கு
னுமையுடன்கூடி மிளிரேகபாதன் சுகன், அறவரிய தக்ஷிணா மூர்
தியொடிலிங்கமா மையனேயருமைமதவே, ளனுதினமு மனதி
னை தருசதுரகிரிவள ரறப்பளீ சுரதேவனே. (௯௯

கவி வணக்கம்.

மலரிதழி பைங்குவளை மென்முல்லைமல்லிகை மருக்கொழுந்
யர்கூவிளம், மற்றுமுளவாசமலர் பத்திரஞ்சிலசூடி மணிமுடி தன
ற்பெருத்தே, சிலரெருக்கொடுவனத் துட்பூளை பச்சறுகு செம்மு
ளிமலர்சூடவே, சித்தம்வைத் திடவுமங் கீகரித்திடுமகா தேவதேவ
தெரிந்தே, கலைவல ருரைக்குநன் கவியொடம் பலவாண கவிராய
கு மென்புன், கவிமையுஞ்சூடியே மனமகிழ்ந்திடுவதுன் கடமைது
ம், அலைபெருகு கங்கையுஞ் செழுமதிய மும்புனையு மமலனே ய
மைமதவே, ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்ப
சுர தேவனே. (ா

அறப்பளீ சுரசதகம்
முற்றிற்று.

சரணங்கள்.

க. ஆயிரம்வெள்ளம் சேனைவுண்டிதை
  அறியாதவர்யிங்கே எவர்தாமோ
அல்லதொறுசிறுமுள்ளு குத்தினல்
  அதுகொண்டென்னபெரு மலைநோமோ
மாயமோயிந்தகாட்டுப்பூச்சிகள்
  வல்அரக்கர்படைக் கெதிர்ஆமோ
வாயைமூடடா பேயாவுனக்கென்ன
  வலதுசொல்லச்சொல் மதிதான்கெட்டுப்போமோ எங்

உ. வழக்கமோமாயனுக்கும் என்கணை
  மணியோ மார்பிலிடும் சவ்வாதோ
மதித்தகைலாசம் எடுத்தான்இந்த
  மனிதரைப்பொருதசஞ் சலம்வேதோ
உழக்கிலேகிழக்கும் மேற்கும்காட்டி
  உறுக்கிருய் இதென்ன சூதோ
உடற்குள்ளேநாவழிக்கிருய் விரல்
  உரல்ஆனுல்உரல் எப்படிஆகாதோ எங்

உ. அதம்செய்யேனேசீதையால் இளைத்தால்நீ
  அழைஐயாயென்னை பேர்மாற்றி
ஆலகாலவிஷமோ சிவனுக்கும்யென்
  அம்பைவிழுங்கப்போமோ கனைஆற்றி
பதுங்கிராட்சதர்முன் பயப்படுநாருக்குப்
  பயப்படச்சொன்னுய்பயங் கரமேற்றிப்
பயப்படும்நரர்கீழே பயப்படும்குரங்குக்கும்
  பயப்படச்சொன்னுய்இது வெகுநேர்த்தி எங்கே

சாரணர் ராவணனுக்கு ஸ்ரீராமர்முதலானேரைக்காட்டல்.

விருத்தம்.

அன்றுசொன்னபாட்டனை இவ்வாறுதள்ளி
  அன்னேரம்கன்னியர்கள் ஆடிப்பாடத்
துன்றுமணிஉத்தர கோபுரத்தில்யேறிச்
  சூரியனைக்கண்டதொரு ராகுபோலக்
கன்றியிராமனையும் சேனையுங்கண்டு
  காய்ந்தராவணனுக்குச்சுவேலைமேலே